# யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

# பரிசுத்தினம் - 2001

அதிபர் அறிக்கை

பிரதம விருந்தினர்

கலாநிதி என்.சண்முகலிங்கன் (M.A.,PHD)

(தலைவர் அரசறிவியல், சமூகவியல்துறை, யாழ். பலகலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்

திரு.நா.வரதராஜா அவர்கள்

(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - யாழ் கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்

திரு.க. சொக்கலிங்கம் M.A. அவர்கள்

(சொக்கன்)

பரிசு வழங்குபவர்

திருமதி கௌரி - சண்முகலிங்கன் (B.Com, Dip - in - Ed)

**2001-11-28 புதன்கிழமை காலை 9.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

இன்றைய எமது பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக சமுகமளித்திருக்கும் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல், சமுகவியில் துறைத் தலைவர் கலாநிதி என்.சண்மகலிங்கன் அவர்களே! அவர் தம் பாரியார் திருமதி கௌரி சண்முகலிங்கன் அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்து எமது விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.நா.வரதராஜா அவர்களே! பழுத்த அனுபவமும் பாண்டித்தியமும் பெற்று எம் ஊரை புகழுடைய வைக்கும் கௌரவ விருந்தினர் திரு.சொக்கன் ஐயா அவர்களே! பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! இதர பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே! நலன் விரும்பிகளே! மாணவச் செல்வங்களே!

நீங்கள் அனைவரும் எம் விழாவைச் சிறப்பிக்க எம்மிடையே சமுகமளித்திருப்பதையிட்டு அகமிகமகிழ்கிறேன். எமது பரிசுத் தின அதிபர் அறிக்கையை உங்கள் முன் வைப்பதில் மனமிக மகிழ்கின்றேன். எம் முதன்மை விருந்தினர் கௌரவ கலாநிதி என்.சண்முகலிங்கன் அவர்களே!

சகல கலைகளிலும் வித்தகரான தாங்கள் எம் பாடசாலை பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்ததினால் எமது பாடசாலைச் சமூகம் பெருமை கொள்கின்றது. தங்கள் பாடசாலைக் கல்வி யா/மகாஜனக் கல்லூரியில் அமைந்து இன்றைய தங்கள் உன்னத நிலைக்கு ஸ்திரமான அத்திவாரம் இடப்பட்டிருக்கிறது கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பட்டதாரியாகிய தாங்கள் ஆசிரியர், மாணவ சமூகத்தின் யதார்த்த நிலையை அறிந்திருப்பீர்கள் தாங்கள் பிலிப்பைன்ஸ் அற்றனையோ டி.மனிலா (Atteneo de Manila University) பல்கலைக்கழகத்தில் உயர் பட்ட ஆய்வு பயிற்சியினை மேற்கொண்டு சிறப்படைந்தீர்கள். பேராசிரியர் கணநாத் ஒபயசேகர அவர்களின் வழிகாட்டலில் (துர்க்கையின் புதிய முகம் (A New Face of Durga) என்னும் விடயத்தில் தாங்கள் செய்த ஆய்வும் அதன் பயனாகத் தாங்கள் பெற்ற பட்டமும் எம் சமூகத்திற்கும் சமயத்திற்கும் அழியாப் புகழையும் பயனையும் ஏற்படுத்தி உள்ளது. தற்போது சமூகத்தின் ஒரு அங்கத்தவராக எம் மாணவரை சமூகவியலில் பாண்டித்தியம் பெற்று சமூகத்தோடு இசைவாக்கம் பெறுவதற்கு தாங்கள் சமூகவியல் துறைத் தலைவராக இருப்பது உறுதுணையளிக்கும். தாங்களும் தங்கள் பாரியாரும் எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில் வழங்கும்போது அச்செல்வங்கள் அடையும் பூரிப்பும் புன்னகையும் தங்களை மகிழ்விக்கும் என்பதை மறுக்கமுடியாது. வளங்களில் பின்னடைவுள்ள எம் பாடசாலையில் எம் தரத்திற்கேற்ப எடுக்கப்பட்ட இவ்விழாவிற்கு சமூகமளித்தமையால் நாம் அகமிக மகிழ்கிறோம்.

சிறப்பு விருந்தினராக எம் விழாவினைச் சிறப்படையச் செய்யும் எமது பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. நா. வரதராசா அவர்கள் எம்மவர் எம் கஷ்ட நட்டங்களை அறிந்தவர். இன்று இவ்விழாவினை எடுத்து எமது மாணவர்களை ஊக்குவித்து கல்வி விருத்தியடைய செய்வதற்கு நாம் எதிர் நோக்கும் பிரச்சினை எத்தகையது என்பதை அறிந்தவர். வடமராட்சியில் புகழ்பூத்த கல்லூரியாம் யா/ஹாட்லிக்கல்லூரியில் தங்கள் கல்வி சிறப்படைந்தமையால் இன்று ஓர் நல்லதிகாரியை நாம் பெற்றுள்ளோம். மும் மொழிகளிலும் தாங்கள் பெற்ற புலமை தங்கள் நிர்வாகப் பணியை சிறப்படையச் செய்துள்ளது. ஆசிரியராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நாள்கள் சேவை செய்து ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து அதற்கேற்ப ஒழுகுபவர் போட்டிப்பரீட்சை மூலம் கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட தாங்கள் யாழ்ப்பாணம் இருவலயங்களாக இருந்த வலிகாமத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் தற்போது ஆசிரிய நிர்வாகப்பகுதிக்கு பிரதிக்கல்விப்பணிப்பாளராக பொறுமையுடனும் பொறுப்புடனும் தாங்கள் சேவை செய்து எம் பணிகள் சிறக்க உதவுகிறார்கள். தாங்கள் எம்விழாவைச் சிறப்பிக்க வருகை தந்ததனால் பேருவகை அடைகிறோம்.

எமது கௌரவ விருந்தினர் வித்துவான் திரு.க. சொக்கலிங்கம் (சொக்கன்) M.A. அவர்களின் வருகையால் எமது பாடசாலைச் சமூகமே கௌரவமடைந்துள்ளது. 'சொக்கன்' என்றால் இலங்கையில் அறியாதவர் எவருமிருக்கமாட்டாகள். தமிழில் பெற்ற பாண்டித்தியம் எம்மாணவரிடையே அவர் ஆற்றும் தன்னலமற்ற சேவையால் பயன்பெறுகின்றது. எம்பாடசாலைக் கீதத்தை எழுதியதையும் சொக்கன் மணி விழாச்சபையினால் எம்மாணவர் இன்றுவரை பயன்பெறுவதையும் அறியாதோர். இருக்கமாட்டார்கள் ஊரின் கண் இப்படியான பழுத்த அனுபவமுள்ள பழமரங்கள் இருப்பதால் ஊர் சிறக்க ஒவ்வொரு இல்லமும் சிறக்கிறது. சொக்கன் ஐயா அவர்கள் கௌரவ விருந்தினராக எம்மிடையே திகழ்வதால் நாம் பெருமையடைகிறோம்.

எமது பாடசாலை இன்று நேற்றல்ல கடந்த பல வருடங்களாக அம்பாள் கடாட்சம் பெற்று அநேக மாணவர்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்கும் பாரம்பரியம் மிக்கவர்களையும் கலாநிதிகளையும் வைத்தியர்களையும் பட்டதாரிகள் பலரையும் வாண்மை விருத்தி பெற்ற ஆசான்களையும் உருவாக்கிய பெருமை எம் பாடசாலை அன்னைக்குரியதாகும்.

இப்பாடசாலை மாணவர்கள் காலங்காலமாக கோட்டமட்ட மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் விசேடமாக 84, 85 களில் உடற்பயிற்சிப் போட்டிகளில் வளமிக்க கல்லூரிகளுக்கு ஈடிணையாகப் போட்டியிட்டு வரலாறு படைத்தவர்கள் அப்பொழுது 600க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று பயனடைந்தார்கள். காலத்தின் கோலத்திற் கேற்ப ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக மாணவர் வருகையில் விழுக்காடு ஏற்பட்டது. இடம்பெயர்ந்து சென்ற மக்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் மீளக்குடியமராததாலும் இப் பகுதிக்கேற்பட்ட பாதுகாப்பின்மையினாலும் பெரிய பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள மாணவர் வருகையின் விழுக்காடுகாரணமாக அப்பாடசாலைகளின் வரவு வீழ்ச்சியை ஈடுசெய்வதற்கு எம்பாடசாலைக்கு வருகை தரவேண்டிய மாணவர்கள் அப் பாடசாலைகளை நோக்கிச் செல்வதாலும் எம்பாடசாலை மாணவர் வருகையில் வீழ்ச்சி கண்டுள்ளது உண்மையே. ஆனாலும் இன்றுவரை வாண்மை மிக்க ஆசிரியர்கள் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி விருத்தியில் அக்கறை கொண்டு உழைக்கிறார்கள். மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வெளியேறுகிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. இவ் விடயத்தைக் கருத்தில் கொண்டு பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளை இப் பாடசாலைக்கு அனுப்பி பயனடைய வைப்பதோடு பாடசாலை வளர்ச்சிக்கும் உதவுவீர்கள் என எதிர்பார்க்கிறேன். மாணவர் வரவு குறைவடையும்போது அரசாங்கம் எம் பாடசாலைக்கு வழங்கும் மான்யத்திலும் குறைபாடு ஏற்பட்டால் பாடசாலை வளர்ச்சி குன்றும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் மத்தியில் ஊருணி போல விளங்கு இப்பாடசாலையின் வளர்ச்சி உங்கள் கிராமத்தின் வளர்ச்சி, உங்கள் ஒவ்வொரு இல்லங்களின் வளர்ச்சி, உங்கள் பரம்பரையினர் வளர்ச்சி உங்கள் சமுதாயவளர்ச்சி என்பதைக் கருத்தில் கொண்டு எம் பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இவ்வித கஷ்டநிலையிலும் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியோடும் இவ்வூரின்கண் வாழும் நன்மனங்கொண்டவர்களின் நன்கொடைகளாலும் பல்வேறு வளங்களைப் பெற்றுள்ளது. பலவருடங்களாக இடிபாடுற்றிருந்த எம்பாடசாலையின் சுவாமியறையும் மேடையும் அமரர் வைத்திய கலாநிதி க. குகநாகதாசன் நினைவாக திருமதி தில்லைநாயகி குகநாகதாசனால் அளிக்கப்பட்ட நன்கொடையால் இன்று இந்நிகழ்ச்சிகளில் மாணவர் பங்குபற்றி பலனடைகிறார்கள் என்பதை நீங்களே கண்கூடாகக் கண்டு கொள்ளுங்கள். மேலும் எங்கள் பாடசாலைச் சிறுவர்களுக்கு ஊஞ்சலையும் இராட்டினத்தையும் அன்பளிப்புச் செய்த திருமதி கலாநிதி செந்தில்நாதன் அவர்களையும் நான் இவ்விடத்தில் குறிப்பிடாமல் விடமுடியாது.

## ஆசிரியர் விபரம் 2001

எமது பாடசாலையில் இரண்டு கலைப்பட்டதாரிகளும் இரண்டு விஞ்ஞான கணித ஆசிரியர்களும் ஒரு ஆங்கில ஆசிரியரும் பகுதி நேர ஆசிரியர்களாக ஒரு வர்த்தக ஆசிரியையும் ஒரு விவசாய ஆசிரியரும் நான்கு ஆரம்பக் கல்விப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் ஒரு மனையியல் ஆசிரியரும் தமிழ் பாடத்தில் விசேடபயிற்சி பெற்ற ஒரு ஆசிரியரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒருவருமாகப் 14 ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையுடன் சிறந்த பணியாற்றி வருகிறார்கள். செல்வி சி.சுஜீவா எவ்வித வேதனமுமின்றி தொண்டராசிரியராக சிறந்த முறையில் சேவையாற்றி வருகிறார். இப்பாடசாலையின் முன்னாள் அதிபரும், இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க சிரேஷ்ட துணைச் செயலாளருமாகிய திரு.த.பஞ்சலிங்கம் அவர்கள் யாழ். தொலைக்கல்வி நிறுவனத்தின் இணைப்பாளராகவும் திரு.ச.புவனேஸ்வரன் யாழ். கல்வியியற்கல்லூரிக்கு உடற்கல்வி விரிவுரையாளராகவும் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

### இளைப்பாறிச் சென்ற ஆசிரியர்கள்

இப்பாடசாலையுடன் இணைக்கப்பட யாழ். தொலைக்கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு ச. சரவணமுத்து 08.10.2001ல் இளைப்பாறிச் சென்றுள்ளார். பதினொரு வருடங்களாக ஆரம்பக் கல்வி மாணவர்களை சிறப்பாக நெறிப்படுத்தியும் ஐந்தாந்தர புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சிகளை அடையச் செய்த திருமதி. நவம் பேரம்பலம் அவர்கள் 19.09.2001ல் இளைப்பாறியுள்ளார். விவசாய ஆசிரியராக இருந்து நற்பணியாற்றிய திருமதி. கௌரி இலட்சுமணராஜா அவர்கள் 2001 தைமாதம் முதல் தனது சுகயீனம் காரணமாக இளைப்பாறியுள்ளார். விஞ்ஞான ஆசிரியை செல்வி. சு.சாந்தசுலோசனி தீவகத்திலிருந்து இடமாற்றம் பெற்று இங்கு வந்து பலனுள்ள சேவைகள் பல புரிந்து வெளிநாடுசென்று திருமணம் செய்துள்ளார்.

### புதிய ஆசிரியர்கள்

சங்கீத ஆசியை திருமதி. க. சிவானந்தனும், ஆரம்பக்கல்வி ஆசிரியை திருமதி. த. ஶ்ரீதரனும், விஞ்ஞான ஆசிரியர்களான செல்வி. சு. சாந்தசுலோசினி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவினை ஆசிரியர் திருமதி. பு. ரவீந்திரநாதன், திருமதி ப. சிவகுமார், தமிழ்ப்பாட விசேட பயிற்சி பெற்ற திரு.ஐ.குமாரதாசன், விவசாய ஆசிரியர் திரு. சோ. இலட்சுமிகாந்தன் ஆகியோரும் இப்பாடசாலைக்கு புதிதாகக் கடமையாற்ற வந்த ஆசிரியர்களாவர்.

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் திருமதி.சு.வதனஜோதி சங்கீத ஆசிரியை யா/திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலைக்கும் திரு.சி.சரவணபவன் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலைக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள்.

## மன்றங்கள்

**தமிழ்மன்றம்** :- இம்மன்றத்திற்கு உபஅதிபர் திருமதி. யோ.தேவசுந்தரம் பொறுப்பாக இருந்துமாணவர்களை நெறிப்படுத்துகின்றார். தமிழ்த்தினப் போட்டி கள் மாணவர் இலக்கிய மன்றங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

**சைவமன்றம்** :- இம்மன்றம் காலை இறைவணக்கம் வெள்ளி தோறும் விசேட பிரார்த்தனை நற்சிந்தனை, சமயகுரவர்கள் குருபூசைகள் நவராத்திரிவிழா என்பனவற்றைத் திறம்பட நடாத்தி வருகின்றது. இம்மன்றத்தினை திருமதி ஸ்ரீ.சண்முகதாசன் வழி நடத்துகின்றார்.

**ஆங்கில மன்றம்** :- மாணவர்களின் ஆங்கிலப் பேச்சு வாசிப்பு, எழுத்து ஆற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன் மாதம் ஒருமுறை இம்மன்றம் நடைபெறுகிறது. ஆங்கில தினப் போட்டிகளிலும், மாணவர்கள் ஆர்வமுடன் பங்குபற்றுகின்றனர் இம்மன்றப் பொறுப்பாளராக திருமதி. ல. சண்முகலிங்கம் பொறுப்பேற்று மாணவர்களை நெறிப்படுத்துகிறார்.

**கணித விஞ்ஞானமன்றம்** :- மாணவர்களிடம் கணித விஞ்ஞான அறிவை வளர்க்கும் நோக்குடன் இம்மன்றம் செயல்ப்படுகின்றது. திருமதி. ச. கருணாகரன் திருமதி.ப.சிவகுமார் ஆகியோர் மாணவர்களை இம்மன்றச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கின்றனர்.

## ஆசிரியர் கழகம்

பாடசாலை ஆசிரியர் கழகம் ஆசிரியர்களின் தேவைகளை நிறைவு செய்ய உதவிவருகின்றது. ஓய்வு பெற்றோர் மாற்றலாகிச் செல்வோர் திருமணம் புரி வோரை சிறப்பிக்கும்வகையில் விருந்தளித்தும் பாராட்டியும் வருகின்றது. இக் கழகத்திற்குத் தலைவராக திருமதி. ல. சண்முகலிங்கமும் செயலாளராகத் திருமதி ஸ்ரீ சண்முகதாசனும் பொருளாளராக திருமதி. பு. சுதந்திரராசாவும் சிறப்புடன் பணியாற்றுகிறார்கள்.

## பெறுபேறுகள்

**க.பொ.த சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகள்** 1999ம் ஆண்டு பதி னொருமாணவர்கள் இப்பரீட்சைக்குத்தேற்றி நான்கு மாணவர்கள் உயர்கல்வி கற்கத் தகுதிபெற்றுள்ளார்கள். 2000ம் ஆண்டு பன்னிரண்டு மாணவர்கள் தோற்றி ஆறு மாணவர்கள் உயர்கல்விக்குத் தகுதி பெற்றுள்ளார்கள். செல்வன் பூ.கோகுலன் **4D5C1S** தரப் பெறுபேற்றைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சை**

செல்வி. நிசாந்தினி சதாசிவம் 2000ம் ஆண்டிலும் செல்வி. தர்சிகா பரமலிங்கம் 2001ம் ஆண்டிலும் சித்திபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.கல்வி வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் செல்வன் நா.பிரபாகரன் பரிசு பெற்றுள்ளார்.

அன்பார்ந்த பெற்றோர்களே! பெரியோர்களே இன்றும் எங்கள் பாடசாலைக்குச் சொந்தமான விளையாட்டுமைதானம் கிடையாது. குடிநீர்வசதி எங்கள் மாணவர்களுக்கு கிடையாது. இதனால் எம்மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இதற்குரிய உதவிகளை நீங்கள் தருவீர்களானால் எம்மாணவர் கல்வித்தரம் உயரும். மாணவர்கள் பயனடைவர். என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்பாடசாலை நிர்வாகத்தினை செவ்வனே எடுத்துச் செல்ல என்னோடு இயைந்து சேவையாற்றும் உபஅதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். இவ்விழா சிறக்க உதவிய நலன் விரும்பிகள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றிகள். இன்றைய விழாவின் முதன்மை விருந்தினர் கலாநிதி. திரு. என். சண்முகலிங்கனுக்கும் பரிசில்கள் வழங்கிய அவர்தம் பாரியாருக்கும் நன்றிகள் பல. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. நா. வரதராஜா அவர்களுக்கும் கௌரவ விருந்தினராக எம் விழாவிற்கு வருகை தந்த மூதறிஞர் சொக்கன் ஐயா அவர்களுக்கும் நன்றி கூறுவதில் பெருமையடைகிறேன். மற்றும் இங்கு வருகை தந்த உதவி-பிரதிக் கல்விப்பணிப்பாளர்களால் எம் விழா சிறப்படைந்துள்ளது. அவர்கள் அனைவருக்கும் என் அன்பார்ந்த நன்றிகள் இன்று பரிசில்பெற்று பாடசாலையைச் சிறப்படையவைத்த மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் கலை நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி உதவிய எம் பழைய மாணவர்களுக்கும் இன் முகத்துடன் நன்றி கூறுகிறேன்.

இறுதியாக குணம் நாடி குற்றம் நாடி மிகை நாடி மிக்க கொளவந்திருக்கும் பெற்றோர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் நன்றிகள் பலப்பல கூறி அதிபர் அறிக்கையை நிறைவு செய்து கொள்கிறேன்.

**வணக்கம்**

க.சண்முகலிங்கம்
அதிபர்

## பாடசாலை ஆசிரியர்கள்

01. திரு க.சண்முகலிங்கம் - இலங்கை அதிபர் சேவை, 2-II
02. திருமதி யே.க.தேவசுந்தரம் - கலைப்பட்டதாரி Dip-in-Ed
03. திருமதி அ.விஜயகுமார் - விசேட பயிற்சி மனையியல், தரம் I
04. திருமதி ல.சண்முகலிங்கம் - விசேட பயிற்சி ஆங்கிலம் தரம் I
05. திருமதி பு.சுதந்திரராஜா - விசேட பயிற்சி ஆரம்பக்கல்வி தரம்2-II
06. செல்வி தி.தயாநிதி - விசேட பயிற்சி வர்த்தகம், தரம் 2-II
07. திருமதி ஸ்ரீ.சண்முகதாசன் - கலைப்பட்டதாரி Dip-in-Ed [illegible]
08. திருமதி பு.இரவிந்திரநாதன் - விசேட பயிற்சி கைவினை தரம் 2-I
09. திருமதி ச.கருணாகரன் - கலைப்பட்டதாரி Dip-in-Ed. 2-II
10. திருமதி த.சிறீதரன் - விசேட பயிற்சி ஆரம்பக்கல்வி தரம் 2-II
11. திருமதி த.சிறீதரன் - விசேட பயிற்சி ஆரம்பக்கல்வி தரம் 2-II
12. திருமதி ப.சிவகுமார் - விசேட பயிற்சி விஞ்ஞானம் தரம் 2-I
13. திரு ஐ.குமாரதாசன் - விசேட பயிற்சி தமிழ்
14. திரு சோ.இலட்சுமிகாந்தன் - விசேட பயிற்சி விவசாயம் தரம் 2-I
15. செல்வி ந.சந்திரபவானி - பகுதிநேர ஆங்கில ஆசிரியர்
16. செல்வி சி.கஜேவா - தொண்டர் ஆசிரியர்
17. திரு [illegible] - பாடசாலை தொழிலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு பெறுவோர் விபரம் 2001

தரம் 1.

| | | |
|---|---|---|
| 1. | நி.நிலோஜன் | தமிழ் |
| 2. | ச.திலக்ராஜ் | கணிதம் |
| 3. | ப.நிசாந்தன் | சுற்றாடல் |
| 4. | கு.இளங்கீரன் | சமயம் |
| 5. | தி.பிரதீப் | ஆக்கம் |
| 6. | வெ.பிரதீபன் | அழகியல் |

தரம் 2.

| | | |
|---|---|---|
| 1. | கி.சிவசங்கர் | தமிழ் |
| 2. | பி.துஷ்யந்தன் | கணிதம் |
| 3. | ப.நிரோசன | சமயம் |
| 4. | சோ.விஜித்தா | சுற்றாடல் |
| 5. | மா.சிவகௌரி | அழகியல் |
| 6. | த.காயத்திரி | ஆக்கம் |

தரம் 3.

| | | |
|---|---|---|
| 1. | பு.பிரசிந்தா | தமிழ் |
| 2. | ஜெ.யான்சன் | கணிதம் |
| 3. | வி.கமல்ராஜ் | சுற்றாடல் |
| 4. | கு.கர்மிலன் | சமயம் |
| 5. | பு.பிரசிந்தா | அழகியல் |
| 6. | ம.றஜீவன் | ஆக்கம் |
| 7. | பு.பிரசிந்தா | ஆங்கிலம் |

தரம் 4.

| | | |
|---|---|---|
| 1. | ஆ.சிவாஜினி | தமிழ் |
| 2. | அ.தர்மிகா | கணிதம் |
| 3. | ம.தனஞ்சயன் | சுற்றாடல் |
| 4. | ஜெ.ஜெயதர்சன் | ஆங்கிலம் |
| 5. | அ.தர்மிகா | சமயம் |
| 6. | அ.தர்மிகா | அழகியல் |
| 7. | ஜெ.ஜெயதர்சன் | ஆக்கம் |
| 8. | ஆ.சிவாஜினி | ஆரம்பவிஞ்ஞானம் |
| 9. | ஜெ.நிர்மலன் | சுகாதாரமும் உடற்கல்வியும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 5.

| | |
|---|---|
| 1. ஜெ.ஜெயதர்சினி | தமிழ்மொழி |
| 2. ஜெ.ஜெயதர்சினி | கணிதம் |
| 3. கு.கரேஸ்காந் | சமயம் |
| 4. த.யாழினி | ஆங்கிலம் |
| 5. ஜெ.ஜெயதர்சினி | சுற்றாடல் |
| 6. த.யாழினி | ஆரம்ப விஞ்ஞானம் |
| 7. கு.கரேஸ்காந் | ஆக்கத் தொழிற்பாடு |
| 8. அ.தர்சிகா | அழகியற் தொழிற்பாடு |
| 9. த.யாழினி | சுகாதாரமும் உடற்கல்வியும் |

தரம் 6.

| | |
|---|---|
| 1. லோ.றம்யா | தமிழ் |
| 2. ஆ.ஜினித்தா | கணிதம் |
| 3. லோ.றம்யா | ஆங்கிலம் |
| 4. லோ.றம்யா | சுற்றாடல் |
| 5. லோ.றம்யா | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 6. லோ.றம்யா | சமயம் |
| 7. ஆ.ஜினித்தா | அழகியல் |

தரம் 7

| | |
|---|---|
| 1. வெ.பிரதீபா | தமிழ் |
| 2. வெ.பிரதீபா | கணிதம் |
| 3. வெ.பிரதீபா | ஆங்கிலம் |
| 4. ஸ்ரீ.விஜிதரன் | விஞ்ஞானம் |
| 5. வெ.பிரதீபா | சமூகக்கல்வியும் வரலாறும் |
| 6. பெ.பிரதீபா | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 7. பெ.பிரதீபா | சமயம் |
| 8. பெ.பிரதீபா | சங்கீதம் |
| 9. கோ.லஷ்மன் | சித்திரம் |

தரம் 8

| | |
|---|---|
| 1. ம.நளாயினி | தமிழ் |
| 2. த.ராதிகா | கணிதம் |
| 3. ம.நளாயினி | விஞ்ஞானம் |
| 4. ம.நளாயினி | ஆங்கிலம் |
| 5. ம.நளாயினி | சமூகக்கல்வி |
| 6. த.ராதிகா | சமயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 7. த.ராதிகா | சுகாதாரமும் உடற்கல்வியு |
| 8. த.ராதிகா | சங்கீதம் |
| 9. சி.சறோஜன் | சித்திரம் |

தரம் 9

| | |
|---|---|
| 1. ஆ.சிந்துஜா | தமிழ் |
| 2. பே.துஷ்யந்தி | விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் |
| 3. ஆ.சிந்துஜா | கணிதம் |
| 4. ஆ.சிந்துஜா | சமூகக்கல்வியும் வரலாறு |
| 5. பே.துஷ்யந்தி | ஆங்கிலம் |
| 6. பே. துஷ்யந்தி | சமயம் |
| 7. ஆ. சிந்துஜா | சுகாதாரமும் உடற்கல்வியு |
| 8. பே. துஷ்யந்தி | சங்கீதம் |
| 9. க.பிரசாந்தன் | சித்திரம் |

தரம் 10.

| | |
|---|---|
| 1. லிங்கேஸ்வரி | தமிழ் |
| 2. லிங்கேஸ்வரி | கணிதம் |
| 3. வி. லிங்கேஸ்வரி | விஞ்ஞானம் |
| 4. லி. லிங்கேஸ்வரி | ஆங்கிலம் |
| 5. லி. லிங்கேஸ்வரி | சமயம் |
| 6. லி. லிங்கேஸ்வரி | சமூகக்கல்வியும் வரலாறு |
| 7. லி. லிங்கேஸ்வரி | சங்கீதம் |
| 8. பா. மயூரன் | சித்திரம் |
| 9. பா. மயூரன் | விவசாயம் |
| 10. லி. லிங்கேஸ்வரி | வர்த்தகம் |
| 11. பூ. மஞ்சுளா | மனைப்பொருளியல் |

தரம் 11

| | |
|---|---|
| 1. க. அபராஜிதன் | தமிழ் |
| 2. க.அபராஜிதன் | கணிதம் |
| 3. க.அபராஜிதன் | விஞ்ஞானம் |
| 4. த.தமிழினி | ஆங்கிலம் |
| 5. த.தமிழினி | சமயம் |
| 6. க.அபராஜிதன் | சமூகக்கல்வியும் வரலாறு |
| 7. த.தமிழினி | வர்த்தகம் |
| 8. ம. துளசினி | மனைப் பொருளியல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. க.அபராஜிதன் விவசாயம்
10.த.தமிழினி சங்கீதம்
11.க.அபராஜிதன் சித்திரம்

## G.C.E (O/L) 1999

1. நாகையா பிரபாகரன்
2. மெருஜனா சண்முகலிங்கம்
3. கீதா துரைராஜா
4. அனுராதா சிங்கராஜா

## G.C.E (O/L) 2000

1. பூபாலசிங்கம் கோகிலன்
2. குணரட்ணம் மயூரன்
3. வெற்றிவேல் சுஜீவன்
4. சாயினி செல்லத்துரை
5. தம்பிராஜா தங்கேஸ்வரன்
6. வாமதி பெருமாள்பிள்ளை

### புலமைப்பரிசில் பரீட்சை
### தரம் 5

2000 - 1. நிசாந்தினி சதாசிவம்

2001 - 1. தர்சிகா பரமலிங்கம்

### சகலகலாவல்லி மாலை மனனப் போட்டி - 2001

### மத்திய பிரிவு

1. த. ராதிகா 1ம் இடம்
2. பா. ரஜிதா 2ம் இடம்
3. ஆ. ஜினித்தா 3ம் இடம்

### மேற்பிரிவு

1. பே. துஷ்யந்தி 1ம் இடம்
2. லி. லிங்கேஸ்வரி 2ம் இடம்
3. ஆ. சிந்துஜா 3ம் இடம்

இப்போட்டிக்குரிய பரிசில்களை அன்பளிப்புச் செய்தவர்
**திருமதி மகேஸ்வரி இராசேந்திரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கீதம்

,பாகம் :- மோகனம் தாளம் :- ஆதி

வாழிய மகேஸ்வரி வித்தியாசாலை
வையகம் போற்றிட என்றும்
மன்னிய பேரருள் யாழ் மகேஸ்வரியின்
மாபெயர் பெறுகழகம் - எங்கள்
மதிமிகு கலைகழகம் என்றும்
மணம் பெறும் புகழ்கழகம்
செந்தமிழ் ஆங்கிலம் அறிவியல்
கலைபல சேர்ந்து திகழ் கழகம் -
நிதம்
செழித்து வளர் கழகம் அன்பின்
சிறந்திடும் நம் கழகம்
அன்னை எம்கழகத்தின் அதிபர் ஆசிரியர்
அறிவுடன் நெறிகாட்ட நாங்கள்
நிறைவுயர் உற்றிடுவோம் - நாளும்
அறிவினில் ஓங்கிடுவோம்
நாயன்மார் கட்டெனும் நம்மெழில் பதியில்
நறும் திலகம் எனவே - மேன்மை
நிறைந்து பொழிந்திடவே அன்னை
செறிதழல் போற்றிடுவோம்
வாழிய மகேஸ்வரி வித்தியாசாலை
வாழிய வாழியவே

இயற்றியவர் :-
வித்துவான் க. சொக்கலிங்கம் (M.A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் ஓவ்(f)செற் பிறின்டிங், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org